கம்பன் கெடுத்த காவியம்

மு. அண்ணாமலை

★

பொன்னி வெளியீடு 5

இந்தச் சிறு புத்தகத்திற்கு நான் முதலில் **கம்பன் கொடுத்த காவியம்** என்றுதான் தலைப்புக் கொடுத்திருந்தேன். அச்சுக்கோர்ப்பவர் பிழைதிருத்தத்தாளை மேசையில் வைத்தபோது **கொடுத்த** என்ற சொல் **கெடுத்த** என்று அச்சாகியிருந்ததைக் கண்டேன்.

"ஐயோ பெரிய தவருயிற்றே!" என்ருர் பக்கத்திலிருந்த என் நண்பர்.

"பரவாயில்லை; தவறுதான் என்ருலும் அர்த்தமுள்ள தவறைச் செய்திருக்கிருர்" என்றேன் வழுவமைதியாக.

தெரிந்தோ தெரியாமலோ அச்சுக்கோர்ப்பவர் இட்டதே நூலின் தலைப்பாகி விட்டது.

மு. அண்ணமலை.

விலை 4 அணு

வெளியிடுவோர்:
பொன்னி லிமிடெட்
16, சேணியம்மன் கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை,
சென்னை-21.

கம்புன் கெடுத்த காவியம்

1. அனுமன் தூதனா?

இராமாயணத்தில் அனுமான் தூதனாக ஆக்கப்பட்டிருக்கிறான். கம்பன் அனுமானை 'இராகவன் தூதன்' என்றும் 'நாயகன் தூதன்' என்றும் அழைக்கிறான். அனுமான் தன்னை இராவணனிடத்தில் அறிமுகப்படுத்திக்கொள்ளும் போது, "செங்கணோர் வில்லிதன் தூதனாய் இலங்கை மேயினேன்" என்று சொல்லுகிறான்.

உண்மையில் அனுமன் தூதனா?

கம்பன் தூதன் என்று சொல்வதனால் அனுமன் தூதனாய் விட முடியுமா? இராவணனிடம் விபீஷண ஆழ்வார் 'அனுமன் தூதன், அதனால் அவனைக் கொல்லுதல் கூடாது' என்று அறிவுரை புகல்வதால் அனுமன் தூதனாய்விட முடியுமா?

அனுமான் உண்மையில் தூதன் என்றால் இலங்கைக்குச் சென்றவுடன் நேராக இராவணனிடம் சென்றிருக்க வேண்டும். அப்படிச் சென்றானா? ஊர்தேடு படலத்திலிருந்து இலங்கை எரியூட்டிய படலம் வரை அவன் செய்வதனைத்தும் ஒரு தூதுவனுக்குரிய செயல்களா? ஒரு தூதுவன் தனக்குரிய நெறி முறையில் சிறிது வழுவினும் அவன் தூதுவனாக முடியாது. அனுமான் தூதுவனாயின் அசோக வனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதையுடன் பேசலாமா? அதை அவன் இராவணனின் அனுமதியோடல்லவா செய்திருக்கவேண்டும்? அதுமட்டுமன்று; சீதையைப் பார்த்து அனுமான் "இராமனின் திருமுன்னிலையில் தங்களைக் கொண்டுபோய்க் 'காட்டி யடி தாழ்வேன்.' "துயரத்தைவிட்டு மெத்தென்றிருக்கும் என் தோள்மீது அமர்ந்துகொள்ளுங்கள். இராமனோடு கூடி இனிய துயில் பெறுவதற்காக இராமபிரான் இருக்கும் குன்றினிடத்தே தங்களைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். இடை வழியில் எங்கேயும் நிற்கமாட்டேன். அரக்கர் தங்களை நான் கடத்திச் செல்வதறிந்து வந்தால் அவர்களை அழித்துச் சிதறடித்து என் சினத்தை முடித்துக்கொள்வேன்" என்று கூறுகிறான்.

"பொன்திணி பொலங்கொடி என் மென்மயிர் பொருந்தித்
துன்றிய புயத்தினிது இருக்கத்துயர் விட்டாய்
இன்துயில் விளைக்கவொர் இமைப்பினிறை வைகும்
குன்றிடை உனைக்கொடு குதிப்பென் இடை கொள்ளேன்"

"அறிந்திடை அரக்கர் தொடர்வார்கள் உளரா மேல்
முறிந்துதிரம் நூறியெதிர் என் சினம் முடிப்பேன்."

—கம்பன்

[பொன் திணி பொலங்கொடி—பொன்னிறமான
பூங்கொடி சீதையே!
முறிந்து உதிரம் நூறி—அழிந்து சிதறும்படி
நாசம் செய்து]

இப்பாடல்களை மீண்டும் படித்துப் பாருங்கள். ஒரு தூதுவன் இவ்வாறு கூறலாமா? இராவணன் சிறைவைத்திருக்கும்

ஒருத்தியைத் தூதுவனாக வந்தவன் கள்ளத்தனமாகக் கடத்திக்கொண்டு போக நினைப்பது நெறிநின்ற பண்பா? அப்படிக் கருதுபவனைத் தூதன் என்று கம்பன் குறிப்பிடலாமா? அனுமானைக் கம்பன் எப்படி அழைக்கிறான் என்பதைக் கவனிக்காமல், அனுமான் செய்யும் செயல்களைக் கொண்டு அனுமானின் பண்புச் சித்திரத்தை உருவாக்கிப் பார்க்கவேண்டும். அவன் செய்யும் செயல்கள் அனைத்தும் அவன் தூதன்தானா என்பதை முடிவு செய்யட்டும்.

சீதையிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு திரும்புகிற அனுமான், சீதையைப் பார்த்துவிட்டுச் சும்மா போகலாமா என்று நினைக்கிறான். ஏதாவது செய்துவிட்டுப் போகவேண்டும் என்ற 'குரங்குப் புத்தி' அழகுத் தேவதை கொலு வீற்றிருக்கும் அசோக வனத்தை அழிக்கும்படி தூண்டுகிறது. பொன்னும் மணியும் பூண்டு, மகிழ்ச்சியில் கூடிக் குலாவிக் கவலையின்றிக் குடிமக்கள் வாழ்கின்ற இலங்கையில், இன்பந்தரும் பூங்காக்களும் பொன்னிற மண்டபங்களும் பலப் பல. இராவணன் அழகுறக் காப்பாற்றி வைத்திருக்கும் வனத்தை அதன் அருமை தெரியாத ஆஞ்சநேயன் மனம் போனபடி அழிக்கிறான். 'துன்று கடி காவினை அடி கொடு' துவைக்கிறான். சந்தன மரங்கள் தகர்கின்றன. 'தேன் மழையும் வண்டும் மயிலும் மடி'கின்றன. 'இந்திரனின் பொழிலும் இந்த வனத்திற்கு ஈடாகாதே' என்று வான்மீகி பெருமூச்சுவிடும் அந்த அசோகவனத்தை நாசம் செய்கிறான் அனுமான்.

அலறியோடும் அரக்கர் குல மகளிர்மீது 'நின்ற செய்குன்று கண்டு தடக்கைகள் நீட்டிப் பற்றி' எறிய நினைக்கிறான். எம்மனோரால் பாட முடியாத அத்தனை சிறப்பு வாய்ந்த பொன் மண்டபமாயிற்றே என்று கம்பன் மலைக்கும் அந்தப் பொன் மாளிகையைப் பெயர்த்தெடுத்து இலங்காபுரியின்மீது எறிகிறான்.

அரக்க வீரர்கள் சிலரை ஓடிக் கொல்கிறான்; சிலரை மரத்தால் சாடிக்கொல்கிறான்; சிலரை முட்டிக்கொல்கிறான்.

ஊர்தேடு படலத்திலிருந்து இலங்கை எரியூட்டும் படலம் வரை—சுருங்கச் சொன்னால் சுந்தர காண்டம் முழுவதிலுமே—அனுமான் செய்வதனைத்தும் அசல் 'ரௌடித் தனமே'யாகும். அனுமான் செட்ட கேட்டிற்குத் தேவர்கள் பூமாரி வேறு பெய்வதாகப் பாடி மகிழ்கிறான் கம்பன்.

அனுமானுக்கு இடப்பட்ட கட்டளை என்ன? அவன் செய்ததென்ன?

இத்துணை அழிசெயல் புரிந்த அனுமானைக் கம்பன் ஏன் அடிக்கடி 'தூதன், தூதன்' என்று வலியுறுத்த வேண்டும்? உண்மையில் கம்பனுக்குத் தூதுவன் என்ற சொல்லுக்கும் ஒற்றன் என்ற சொல்லுக்கும் பொருள் வேற்றுமை புலப்படவில்லையா? அல்லது படிப்பவர்களனைவரும் ராமபக்தர்களும் கம்பதாசர்களுமாகவே இருப்பார்கள் என்ற கருத்தா? வடநாட்டு வான்மீகிக்குத் தெரியாதிருப்பின் அதில் நியாயமுண்டு; தமிழ்நாட்டுக் கம்பனுக்குத் தெரிந்திருக்கத்தானே வேண்டும். ஒற்றன் யார், தூதன் யார் எனத் தெள்ளத் தெளிய விளக்கும் திருவள்ளுவப் பெருந்தகையைக் கம்பன் ஏன் மறந்தான்—ஏன் மறைத்தான்?

தெய்வமாக் கதை பாடவந்த கம்பன் — ஸ்ரீராமவதாரம் பாடவந்த கம்பன்—ஸ்ரீராமபிரானின் தூதனை எப்படி ஒற்றன் என்று சொல்லுவான்! ஆசைபற்றி அறைய வந்த காரணத்தால் கம்பன் கலையுணர்வுக்கு வேண்டிய நேர்மையை இழந்துவிட்டான். இராமபக்தன் என்ற காரணத்தால் ஸ்ரீராமனின் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இல்லாத பண்புகளை ஏற்றுவதோ, செய்த தவறுகளை மறைப்பதோ கலைஞனின் நேர்மைக்கு அழகன்று.

தெய்வ உணர்வுக்கெதிரே கலையுணர்வு தோற்றது!

அனுமான் ராமபிரானுக்குத் தூதுவனுக இருக்கலாம். இராவணனுக்கு அவன் பிறநாட்டு ஒற்றன்தானே. இராவணன் அவனைக் கொல்லவேண்டியதுதான் முறை. பெருமித உணர்ச்சியாலும் பெருந்தன்மையாலும் குரங்கனைச் சும்மா விட்டுவிடுகிறுன். இராவணன் முதலில் அனுமனைக் 'கொல்லலை தருகெனக் கூறுவீர்' (அனுமனைக் கொல்லாமல் இங்கே கொண்டு வருக) என்றுன்.

சிலப்பதிகாரத்துப் பாண்டியனைப் போலக் 'கொன்றச் சிலம்பு கொணர்க' என்று அவசர புத்தியோடு இராவணன் கட்டளையிடவில்லை.

ஆனல் அனுமன் அரசவையில் எவ்வாறு பேசவேண்டும் என்ற முறைபிறழ்ந்து பேசினமை காரணமாகவே இராவணன் சினம் கொள்ளுகிறுன். கொல்லும்படி கூறுகிறுன். கேவலம் ஒரு குரங்கு—தனக்கு அறிவுரை போதிக்கத் தொடங்கியபோதுகூட இராவணன் பேசாமல் பெருமிதத்தோடு அலட்சியமாகவே நகைத்தான்.

அனுமனைக் கொல் என்று இராவணன் வாயிலிருந்து ஆணை பிறந்ததும் விபீஷண ஆழ்வார்,

"மாதரைக் கொலை செய்தோர்கள்
உளரெனவரினும் வந்த
தூதரைக் கொன்றுளார்கள்
யாவரே தொல்லை நல்லோர்"

என்று அறத்தாற்றை அண்ணனுக்கு எடுத்துக்காட்டுவதாக நினைத்துக்கொண்டு பேசுகிறுர். 'பெண்களைக் கொன்றவர்கள் இந்த உலகத்தில் உண்டென்று சொல்லலாம். வந்த தூதரை இதுவரை யாரும் கொன்றதாக இல்லையே' என்கிறுன்.

விபீஷணன் சொல்லும் உண்மையில் தவறில்லை, அனுமானுக்குத் தூதுவனுக்குரிய தகுதி மட்டும் இருக்குமானல்...!

'ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத் தாடகை எனும தையலாளை' வீழ்த்திய பெருவீரனுக்கு இராமனே எடுத்துக் காட்டாக நிற்கிறான். போதாததற்கு ஒரு பெண்ணின் மூக்கறிந்து பெருமையுற்ற இலக்குமணன் அவன் பின்னால் வருகிறான்- அதனால்தானே என்னவோ விபீஷண ஆழ்வார் 'மாதரைக் கொலை செய்தோர்கள் உளரெனவரினும்' என்று மழுப்பிவிடுகிறார்.

13/4-52

சரியான ஒற்றனுமல்லன்

இராமனுக்காகச் சுக்ரீவனால் அனுமன் அனுப்பப்படுகிறான். சீதை எங்கிருக்கிறாள் என்று தேடிக் காணவேண்டும் என்பதே அனுமனுக்கு இடப்பட்ட கட்டளை. தென்திசைப் பக்கம் அனுப்பப்படுகிறான்.

சடாயுவால் செய்தி சிறிது கூறப்பட்டதென்றாலும் இராவணனிடம்தான் சீதைஇருக்கிறாள் என்றோ அசோக வனத்தில்தான் சிறைவைக்கப்பட்டிருக்கிறாள் என்றோ திண்ணமாகவும் தீர்மானமாகவும் தெரிந்துகொள்ளாத நிலையில்—'நீ இராவணனிடம் தூதுசெல்; சீதையைச் சிறை நீக்குமாறு கூறு' எனக் கட்டளையிடப்படாத நிலையில்-அனுமான் தூதுவனாதற்கு இடமில்லை. சீதையைத் தேடும் அனுமான் ஒரு ஒற்றனுக்குரிய வேலையையே இராவணன் நாட்டில் செய்தற்குரிய கடப்பாடுடையவனாகிறான். இலங்கையில் அனுமதியின்றிச் சீதையைத் தேடினான். சீதையை அசோகவனத்தில் கண்டான்; பேசினான். அதற்கு மேல் அவன் செய்வதுதான் 'அதிகப்பிரசங்கித்தனமாக' இருக்கிறது. பல அடாத செயல்கள் புரியாது திரும்பியிருப்பின் சரியான ஒற்றனாவான். ஆகையால் அவன் சரியான ஒற்றனல்லன்; தூதனுமல்லன்.

கடமை தவறிய அடிமை அல்லது உணர்ச்சி வயப்பட்டுத் தனக்குரிய பணியை மறந்த கயவனாவன்.

"அப்பா அனுமந்தா, நீ இலங்கையிலே புரிந்த திரு விளையாடல்களையெல்லாம் உன் உள்ளம் ஒப்புகின்றதா? அவை ஒழுங்கானவைகள் தாமா?" என்று கேட்டால் வான்மீகி காட்டும் அனுமான் இந்தக் கேள்விக்குச் சிறிது சிந்தித்து விடையளிக்க முயல்கிறான்.

'இட்ட பணியை முடித்துவிட்டுத் திரும்பவேண்டிய நான் இப்படி அசோக வனத்தை அழிக்கலாமா?' என்ற கேள்வியைத் தனக்குத் தானே எழுப்பிக்கொள்ளுகிறான். 'தலைவனின் கட்டளையையும் அதற்கினமானது எதுவும் இருந்தால் அதையும் தலைவன் கட்டளையின்றியே முடிக்கலாம்; அதுதான் கெட்டிக்காரத்தனம்' என்று தன்னைத் தானே தேற்றிக்கொள்ளுகிறான். அனுமான் இவ்வளவு செய்கின்றானே என்று வான்மீகியின் மனத்தில் எழுந்த குழப்பந்தான் அந்தப் பிரச்சினையை எழுப்பிக்காட்டு கிறது.

அனுமான் செய்த அட்டூழியங்களெல்லாம் அவனுக் கிடப்பட்ட கட்டளைக்கு இனமானவை என்றால் உலகத்தில் ஒவ்வொரு வேலையாளும் தன் மனம் போனபடி செய்து விட்டுத் "தலைவரே நீர் இட்ட கட்டளைக்கு இனமானவற் றையே செய்து முடித்திருக்கிறேன்" என்று எளிதாகச் சொல்லிவிடலாம். நேர்மையை விரும்புகின்ற மகாத்மா வாக இருந்தால் அந்தப் பணியாளை ஒருவன் விரும்ப மாட்டான்.

சீதையின் தீர்ப்பு

இந்த வழக்கை நாம் சீதாதேவியின் திருமுன்னிலை யில் வைத்துக் கேட்டுப் பார்க்கலாம். அனுமன் நடந்து கொண்ட முறை சரியா இல்லையா என்று தீர்ப்புக் கூறும் இடம் ஒன்று வான்மீகி இராமாயணத்தில் யுத்த காண்டத்

தில் காணப்படுகிறது. அவளுடைய தீர்ப்பில் அனுமனின் செயல் நன்கு ஆராய்ந்து முடிவு கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையில் போர் முடிந்த சமயம் இராவணன் வீழ்த்தப்பட்டு மாண்ட செய்தியையும், இராமனின் வெற்றியையும் அசோக வனத்தில் இருந்த சீதைக்கு அனுமன் தெரிவிக்கச் செல்லுகிறான். சீதைக்கும் அவனுக்குமிடையே சிறு உரையாடலொன்று அப்பொழுது நடக்கிறது. அந்த உரையாடலில் அனுமான் சீதையை நோக்கி "இந்த வனத்திலிருக்கும் அரக்கிமார்கள் எல்லாம் மிகக் கொடியவர்கள்; இவர்கள் உங்களை என்ன பாடுபடுத்தினார்கள், என் கண்ணாலேயே கண்டேனே. இப்பொழுது அவர்களைச் சும்மா விட்டு வைக்கலாமா? எனக்குக் கொஞ்சம் அனுமதி கொடுங்கள். இவர்களைப் பிடித்துப் பல்லால் 'நற நற'வென்று கடிக்கிறேன்; கிழிக்கிறேன்; காலால் உதைக்கிறேன்; மிதிக்கிறேன்" என்று குதிக்கிறான். சீதை அவனைத் தடுக்கிறாள். "அரசனிட்ட கட்டளையை நிறைவேற்றினார்களேயொழிய அவர்கள் மேல் என்ன குறையிருக்கிறது?" என்று பெருந்தன்மையோடு பேசுகிறாள். அந்த இடத்தில் அன்பு தோய்ந்த உள்ளத்தையும் பகைவனுக்கும் அருளவேண்டும் என்ற நினைப்பையும் யாரும் போற்றாமலிருக்க முடியாது.

> "லோகத்தில் அபகாரம் செய்யாதவன் யார்? அப்படி ஒருவன் இருந்தால் அவன் அபராதம் செய்தவர்களைத் தண்டிக்கட்டும்."
>
> [சருக்கம் 115 வான்மீகி]

என்று கூறுகிற சீதை அனுமானைப்பார்த்து நான், "நீ, உன் தலைவராகிய என் கணவர் ஆகிய மூவரும் பெரிய அபராதிகள். மூவரும் முதலில் தண்டிக்கப்பட வேண்டும்" என்று சொல்லுகிறாள். அப்படிக் கூறும் சீதை அனுமானிடம் காணும் குற்றம் யாது?

"நீ சுக்ரீவனின் சேவகன்; அவனுடைய கட்டளைப் படி நடக்கவேண்டியவன். அதை அலட்சியம் செய்ய வும் கூடாது; மீறவும் கூடாது. எஜமான் கட்டளை இடா ததைச் செய்கிறவனும் இட்டதைச் செய்யாதவனும் ஒரு தன்மையரே! நானிருக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடித்துச் சொல்லும்படி சுக்ரீவன் உனக்குக் கட்டளை யிட்டானு? அல்லது அசோக வனத்தை அழித்து, ராவண னுடைய படைகளுடன் யுத்தம் செய்து லங்கையைக் கொளுத்துமாறு கட்டளையிட்டானு? ஆகையால் யஜ மானனுடைய ஆக்ஞையை மீறிய நீ பெரிய அபராதி. உன்னைத் தண்டிக்கவேண்டும்."

[சருக்கம் 115. யுத்தகாண்டம் வான்மீகி] (C. R. சீனி வாச அய்யங்கார் B. A. மொழிபெயர்ப்பு) என்று சீதை கூறும் தீர்ப்பையே விமரிசகர்கள் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளலாம்.

2. கம்பனின் மனோதத்துவம்

இராவணன் இறந்து கிடக்கிறான். அவனுடைய உடலிலே எத்தனையோ காயங்கள். ராமபாணம் எள்ளிருக்க இடமின்றித் துளையிட்டிருக்கிறது. இந்த இடத்திலே ஒரு கற்பனை. அந்த ராமபாணம் ஏன் அத்துணை துளையிட்டது தெரியுமா? இராவணன் சானகி மீது காதல் கொண்டிருந்தானல்லவா? அந்தக் காதல் அவன் உடலில்தானே தங்கியிருக்கும். அந்தக் காதல் தப்பித் தவறி இராவணனின் உடலில் தங்கிவிடக்கூடாதல்லவா? அந்த நினைப்பு எங்கெங்கே இருக்கிறது என்று அந்த உடலிலே புகுந்து துருவித்துருவித் தேடியதாம் ராமபாணம். அதனால்தான் அவ்வளவு காயங்கள்!

வெள்ளெருக்கஞ் சடை முடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்க இடமின்றி
உயிரிருக்கும் இடநாடி இழைத்தவாறோ!

கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனத்தேடி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி.

இந்தக் கற்பனை அருமையானது தான். நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன்; சுவைத்தேன்; மகிழ்ந்தேன். ஆனால் சிந்தித்தேன்; மகிழ்ச்சி பறந்துவிட்டது.

இதை யார் வாயிலே கம்பன் அமைத்திருக்கிறான்? மனோதத்துவம் தெரிந்த மகாகவி கம்பன் இதை யார் வாயிலாகச் சொல்லுகிறான்? இராவணனின் அருமை மனைவி—கற்புக்கரசி மண்டோதரியின் வாயிலாக. இறந்து கிடக்கிற கணவனைத் தன் மடியகத்தே கிடத்திக்கொண்டு ஆற்றாமையால் மிகுதியும் புலம்புகிற நேரத்திலே கம்பன் இந்தப் பாட்டைக் கூறுகிறான். எந்தப் பெண்ணால் தன் கணவன் உயிர் துறக்க வேண்டியிருந்ததோ அந்தப் பெண்ணின் கூந்தலைக் 'கள்ளிருக்கும் நறுங் கூந்தல்' என்று அபாரமாக வர்ணிக்கிறாள் மண்டோதரி. கம்பனின் காவியத்தில் மண்டோதரி எப்படிப் புலம்புகிறாள் என்று தொடர்ந்து பார்க்கவேண்டும். கம்பன் ஆக்கியிருக்கும் மண்டோதரி சதா நாராயணனையே நினைத்துக்கொண்டு ராமபஜனை செய்யும் ஸ்ரீராமபக்தையாகக் காட்சியளிக்கிறாள். ஆற்றமுடியாத அவளது சோகத்திலே அவளது கணவனைக் கொன்ற ராமனை ஒரு சிறு சொல்லால் கூட வைதுவிடக்கூடாதே என்று கம்பன் கவனமாக இருக்கின்றான். மண்டோதரி ராமனை வையாமல் கூட இருக்கலாம். ஆனால் ராமனை ஒருவன் அதாவது ஒப்பற்றவன் என்றும 'உத்தமன்' என்றும் பேசலாமா? மனோதத்துவம் தெரிந்த கம்பன் கணவனை இழந்த ஒரு பெண்ணின் மனதை உள்ளபடியே கண்டுகொள்ள முடியவில்லையா?

இதே நேரத்தில் கொஞ்சம் கோவலனை இழந்த கண்ணகியை மனக்கண் முன் நிறுத்திக் கம்பன் ஆக்கிய மண்டோதரியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

வான்மீகி ராமாயணத்தில் மண்டோதரி புலம்பும் போது, இராவணன் புகழ் மேம்பாட்டைப்பற்றிப் பேசிக் கொண்டு வருகிறாள்.

"நீ இறந்து கிடக்கிறாய் என்றே நம்ப முடிய வில்லையே; நீ சர்வ வல்லமை உடையவனாயிற்றே! உன்னைச் சாதாரண ஒரு மனிதன் கொன்றான் என்றால் எப்படி நம்ப முடியும்? கேவலம் அற்ப மனிதன், சிறுவன், வீடு வாச மின்றிக் காட்டுக்குத் துரத்தப்பட்ட இராமனிடம் தோல்வி யடைந்தீர்கள் என்றால் அவமானமாக இல்லையா?

"சீதையைக் காட்டிலும் ரூபத்திலும் சௌந்தர்யத் திலும் அதிகமான பல பெண்கள் தங்களுடைய தயவை எதிர்பார்த்துக் கிடக்கிறார்களே!......... குலத்திலாவது ரூபத்திலாவது, வித்தையிலாவது, சாமர்த்தியத்திலாவது சீதை எனக்கு நிகரா?

"ஆசைதீர ஆலிங்கனம் செய்யலாம் என்று வந்தேனே. இந்தப் பாபியான ராமனின் பாணங்கள் இவ்வாறு செய்திருக் கின்றனவே!"

மீண்டும் 'கேவலம்........' என்ற வார்த்தைகளைப் படித்துப் பாருங்கள். கணவனை இழந்தவள் தன் கணவனைக் கொன்றவனை அலட்சியமாகப் பேசுவது இயல்புதானே! அது தானே மனோதத்துவம்! அது தானே நாடகரீதி!

வான்மீகி கலையுணர்வோடு மண்டோதரியின் புலம் பலைச் சித்தரித்துப் பெரும்பாலும் வெற்றியடைந்திருக் கிறார் என்றே சொல்லவேண்டும். கம்பனின் மண்டோதரி என்ன சொல்லிப் புலம்புகிறாள் என்று பார்ப்போம். "அழியாத அமுது போன்றவனை, பாற்கடலிலே கண் வளரும் நாராயணனை, நான் எப்போதும் இராமன் என்று சொல்லிக்கொண்டிருப்பேன். இதையெல்லாம் நினையாமல் உத்தமனின் மனைவியைக் கொண்டு வந்தாய். அதன் பயன் தான் மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறாய்?"

ஆரா அமுதாய் அலைகடலிற் கண்வளரும்
நாராயணன் என்றிருப்பேன் இராமனை நான்
ஓராதே கொண்டகன்றாய் உத்தமனார் தேவிதன்னை!
பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டதனை!

"ஆரா அமுதாய்! பாற்கடலிலே பள்ளி கொண்டிருக்கும் நாராயணனும், உத்தமனார் தேவியாம்!"

இது மகாகவி கம்பன்—மனோதத்துவச் சக்கரவர்த்தி பாடியது.

பகைவன் எத்துணை தான் உயர்ந்தவனாகட்டும். நாராயணனின் அம்சமாக இருக்கட்டும் அல்லது சாட்சாத் ஸ்ரீமத் நாராயணனாகவே இருக்கட்டும் ஆற்றல் பலவும் உடையனாகவே இருக்கட்டும். அவன் தன் கணவனைக் கொன்ற பகைவனாக இருக்கும்போது அவனை எப்படி உயர்ந்தவனாகப் புகழமுடியும்? ஒரு கணவனை இழந்து தேம்புகிற பெண்ணின் உள்ளத்தைக் கம்பன தெரிந்து கொள்ள முடியவில்லையா?

இராமனின் புகழைப் பாடவேண்டும் என்பது கம்பனின் விருப்பமானால் அதற்குச் சமய சந்தர்ப்பங்கள் கிடையாதா?

கம்பனை எந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்குகிறோமோ அதே குற்றச்சாட்டில் வான்மீகிக்கும் பெரும் பங்குண்டு. ஆனால் வான்மீகியிடம் காணப்படும் ஓரளவு நேர்மையான கலையுணர்ச்சிகூடக் கம்பனிடம் ஏன் காணப்படவில்லை? வான்மீகி காட்டும் மண்டோதரியும் ராமனை மஹாவிஷ்ணுவின் அம்சமாகவே கருதுகிறாள். தன் கணவனைக் கொன்றவனை ஆற்றாமல் வைது புலம்புகிற ஒருத்தியையும், தன் ஒப்பற்ற வல்லமையுடைய கணவனைக் கொன்றவன் சாதாரண அற்ப மனிதனாக இருக்கமுடியாது, அவன் நாராயணனின் அம்சமாகத்தான் இருப்பான் என்று நினைக்கின்ற ஒருத்தியையும் வான்மீகி இணைக்கிறார். பகைவனின் மனைவி இராமனைப் புகழவேண்டும், இராமனின் வல்ல

மையை மண்டோதரி வாயால் கேட்கவேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம், கணவனைக் கொன்ற பாதகனை ஆற்றாது வையும் உள்ள இயல்பை மறைக்கக் கூடாதே என்ற நேர்மை ஒரு பக்கம் வான்மீகியைத் தாக்குகின்றன. இரண்டையும் விடாது இரண்டையும் ஒன்றாக இணைத்து மண்டோதரியின் புலம்பலை உருவாக்கியிருக்கிறார். வான்மீகி தான் உண்டாக்கிய மண்டோதரி இராமபிரானைத் திட்ட அனுமதிக்கும் அளவு கூடக் கம்பன் தன் மண்டோதரியை அனுமதிக்கவில்லையே! கம்பனின் மண்டோதரி கையாளும் செய்யுள் வாசகங்களையும் ராமனுக்கும் சீதைக்கும் கொடுத்திருக்கும் அடைமொழிகளையும் படிக்கும்போது உள்ளம் சகிக்கவில்லையே!

கைகேயி – கம்பன்

இராமனின் முடிசூட்டு விழாவைக் கேள்வியுற்ற கைகேயி முதலில் மகிழ்வுறுகிறாள். அவள் மிகவும் நல்லவள்; கபடமற்றவள். ராமன் மீது மெய்யன்பு கொண்டவள். ராமனின் முடிசூட்டு விழாவைக் கேட்டதும் அவள் கொள்ளும் எல்லையற்ற மகிழ்ச்சியே அவளது தூய உள்ளத்தைக் காட்டப் போதுமானதாகும். நல்ல செய்தியைக் கொண்டுவந்த மந்தரைக்குத் தன் கழுத்திலிருந்த முத்து மாலையைப் பரிசாக நீட்டுகிறாள். பின்னால் படிப்படியாக அவளது தூய உள்ளம் மந்தரையால் திரிக்கப்படுகிறது. இந்தப் பகுதியைப் படித்தபோது கம்பன் கைகேயியை எவ்வளவு இரக்க சிந்தையோடு அணுகுகிறான் என்று நினைத்துப் பெருமகிழ்வுற்றேன். கைகேயி எப்படிப் பாபியானாள் என்று கம்பன் காட்டும்போது அவளுக்காக இரக்கப்படுகிறோம். கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சிப்படலம் மிக அருமையாக இருந்தது என்று களித்தேன். ஆனால் அக்களிப்பு மேலே செல்லச் செல்ல அருகி அருகி மறைந்தொழிவதாயிற்று.

கைகேயியின் உள்ளம் தூயது என்பதும் கம்பனுக்குத் தெரியும், அவனே சொல்லுகிறான். அது எப்படி மந்தரை

யால் திரிக்கப்பட்டது என்பதையும் அவனே காட்டுகிறான். அப்படிக் காட்டும் கம்பன், கைகேயியைப் பெண்டிருள் கூற்றமன்னாள் என்றும், தீயவை யாவினும் கொடிய தீயாள் என்றும் கம்பன் ஏன் கூறவேண்டும்? தசரதன் இந்தக் கொடிய சொற்களால் கைகேயியைத் திட்டினால் அது தவறில்லை, அதுதான் நாடகப் பண்பு. தசரதன் கைகேயியை வெறுத்தால் அதில் பொருளுண்டு; அது தான் மனோதத்துவம்! ஆனால் கம்பன் ஏன் வெறுக்கிறான்? காவிய உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கலாம், வையலாம்; ஆனால் காவியகர்த்தா வெறுக்கக் கூடாது. தான் மறைமுகமாக நின்று செயல் புரியவேண்டும்.

உறுப்பினர் அறிமுகம்

உளநூல் வல்ல எழுத்தாளர்கள் கதை உறுப்பினர்களைச் சித்தரிக்கையில் எப்போதும் கருத்தோடிருப்பர். ஒரு கெட்ட கதை உறுப்பினனைப்பற்றிக் கூறினால் எடுத்த உடனே அவனை 'மகா பாபி' என்றோ 'மகா கொடியவன்' என்றோ 'சகஸ்ரநாம' அர்ச்சனையோடு தொடங்க மாட்டார்கள். இவன் கெட்டவன் என்று வர்ணம் பூசி, 'வில்லன்' என்று 'லேபிள்' ஒட்டித் தொடக்கத்திலேயே படிப்பவர்களின் உள்ளத்தில் ஒரு கருத்தை விதைத்துவிட மாட்டார்கள். அப்படிக் கெட்ட கருத்தோடு கதை உறுப்பினனை அறிமுகம் செய்வதால் அந்தக் கதை உறுப்பினன் செய்யும் எந்தச் செயலையும் சீர் தூக்காமல் ஆராயாமல் குற்றம் என்று வாசகர்கள் முடிவுக்கு வந்துவிடுவார்கள். ஒருவன் நல்லவனா கெட்டவனா என்பதை அவனது செயல்கள் தான் முடிவு கட்ட வேண்டும். அவ்வாறு முடிவு கட்டுபவர்கள் வாசகர்களும் விமரிசகர்களுமே. இன்றைய இலக்கியப் பேரறிஞர்களின் கருத்து இதுவாகும்.

ஒரு கொலைகாரனைப்பற்றி ஒரு உளநூல் வல்லார் விவரிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் திடீரென்று துப்பாக்கியைக் கையில் தூக்கவேண்டிய

அளவுக்கு அவன் உள்ளம் என்ன பாடுபட்டது என்பதைச் சித்தரிப்பர். அதற்குரிய சூழ்நிலைகளையும் வாய்ப்பையும் வரைந்து காட்டும்போது அந்தக் கொலைகாரனின்மேல் நாம் இரக்கம் கொள்ள வேண்டியவர்கள் ஆகிறோம். நம்மை இரக்கங் கொள்ளவைக்கும் ஆசிரியர் பின்னால் அந்தக் கதை உறுப்பினனை வைவதோ வெறுப்பதோ இல்லை. அப்படி அவர் வெறுத்தால் அந்தக் கதை உறுப்பினனை இரக்க உணர்ச்சியோடு சித்தரிக்கக் கூடாது. உள நூல் வல்லார்கள் எந்தக் குற்றவாளியையும் இரக்க சிந்தனையுடன்தான் அணுகுவர்.

ஒரு இலக்கியத்தில் கதை உறுப்பினர் எப்படி அறிமுகம் செய்யப்படுகிறார் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். படிப்பவர்களுக்குச் செய்யப்படும் அறிமுகத்தில் நூலாசிரியன் மிகக் கவலையோடிருக்க வேண்டும். எனவே கெட்ட செயல் உடையவனையும் கெட்டவன் என்ற சொல்லிலே 'லேபிள்' ஒட்டி அறிமுகப்படுத்துவதால் கலைச்சுவை கெட்டுவிடுகிறது.

கொடிய வஞ்சிப்பத்தனைக் கதையில் அறிமுகப் படுத்தும்போதுகூட இளங்கோ அடிகள் மிக நாகரிகமாகவே நடந்து கொண்டிருக்கிறார். வஞ்சிப்பத்தன் மகாவஞ்சகன் எனினும், அவனால் கண்ணகியின் வாழ்க்கை பாழ்பட்டதோடு, பாண்டியர் பெருங்குடிக்கே ஓரிழுக்கும் நேர்ந்ததென்றாலும் இளங்கோ இரக்க சிந்தனையுடனே அறிமுகப் படுத்துகிறார்.

> நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
> மெய்ப்பை புக்கு இலங்குநடைச் செலவில்
> கைக்கோல் கொல்லனைக் கண்டனன் ஆகி,
>
> —சிலம்பு

'நூறு கொல்லர்கள் பின்னால் வருகிறார்கள். சட்டை முதலியன விளங்க அரசவைப் பொலிவுடன் கையிலே கோலைப் பிடித்தபடி வஞ்சிப்பத்தன் செல்லுகிறான்.'

இனிக் கம்பன் கூனியை எப்படி அறிமுகம் செய்கிறான் என்று பாருங்கள்.

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்
கான்றெரி நயனத்தாள் கலிக்கும் சொல்லினாள்
மூன்றுலகினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள்."

இது மனோதத்துவம் தெரிந்த மகாகவி கம்பனின் பாடல்.

இடைக்காலத்திலே வாழ்ந்த கம்பன் ஒப்பற்ற மனோதத்துவ அறிஞனாக இருக்கவேண்டும் என்று கூறவில்லை. ஆனால் இல்லாத ஒரு பண்பைக் கம்பனிடம் இருப்பதாகக் கூறிக் கதைப்பவர்கள் கம்பனுக்கும் மனோதத்துவப் பண்புக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டுமென்பது தான் என் விருப்பம்.

கம்பன் ஒரு சார்பானவன்

கம்பன் தான் நடத்தும் கதை உறுப்பினரிடத்திலே சிலரிடம் வெறுப்பும் சிலரிடம் விருப்பும் சிலரிடம் பக்தியும் கொண்டுவிட்டான். நடுநிலையில் நின்று கதை நடத்த வேண்டியவன்சில கதாபாத்திரங்களுக்கே உரியவன் ஆகவே காவியம் ஒரு சார்பான 'மெய்க்கீர்த்தி'ப் பட்டயமாயிற்று. ஸ்ரீமத் ராமபிரானுக்கு எதிராக வரும் எந்தக் கதாபாத்திரத்தையும் வெறுத்தான்; மனப்பூர்வமாக வெறுத்தான்; வெறுப்பதால்கூடக் குற்றமில்லை, வெளிப்படையாகத் திட்டினான். ஸ்ரீராமன் செய்யும் எந்தச் செயலையும் அவன் புனிதச் செயல்களாக நினைத்தான். மற்றவர்கள் செய்வது எத்துணை நியாயமும் நேர்மையும் உடையதேனும் அதை மறைத்தான்.

இராவணனை 'இரக்கமொன்றில்லா அரக்கன்' என்றும், 'இன்னல்செய் இராவணன்'என்றும், 'கூற்றனையான்' என்றும்,

அரக்கர்களை வாயிடை வயிற்றினர் என்றும் இன்னும் என்னென்னவெல்லாமோ வாயில்வந்தபடி எழுதிவைத்தான். ‘மந்தரை சூழ்ச்சிப் படலம்’ என்று படலத்திற்குப் பெயரிட்டுவிட்டு மந்தரையைக் கம்பன் ‘கூனி கூனி’ என்று அழைப்பானேன்? அதுவே அவன் அந்தக் கதாபாத்திரத்தினிடம் எவ்வளவு வெறுப்புக் கொண்டிருக்கிறான் என்று தெரிவிக்கவில்லையா?

ஒரு நல்ல காவியம் செய்யும்போது கவிஞன் சில கதை உறுப்பினரிடத்தில் அளவுக்கு மீறி விருப்புக் கொள்வதும், சிலரிடம் எல்லைமீறிய வெறுப்புக் கொள்ளுவதும் கூடாது. தான் விரும்பியதைச் சாதிக்க உண்மையைத் திரித்துவிடக் கூடாது.

3. முடிவுரை

இராவணன் பகைவர்களால் தூற்றப்படலாம். ஆனால் அவன் குடிமக்களால் போற்றப்படுபவன். குடி பழி தூற்றும் கோலன் அல்லன். அவனுடைய நாட்டில் செல்வ வளம் பெருகியிருந்ததை வான்மீகி எடுத்துக்காட்டக் கம்பன் ஒத்துக்கொள்ளுகிறான். இராவணன் ஒரு சிறந்த வீரன்; கலைஞன்; நிகரற்ற அழகன். அவன் சண்டை செய்யப் போர்க்களம் வரும்போது இராமனே அவனது அருமையான உடல்வனப்பில் ஈடுபடுகிறான். அவன் வாழ்க்கையில் செய்தஒரேஒருதவறு பிறன்மனை விழைந்ததுதான். அதுகூட அரசர்களின் வரலாற்றில் சர்வ சாதாரணமானது. வள்ளுவர் காலத்தில் மிகப்பரவியிருந்த செயல். கம்பனின் வாக்குமூலப்படி இராவணன் சீதையைச் சிறைவைத்தது அல்லது வான்மீகியின் வாக்குமூலப்படி சீதையின் கற்புக்கு மாசுதேடியது குற்றம்தான். ஆனால் கம்பன் இராவணனைப் பெயரிட்டு அழைத்திருக்கிற கொடிய சொற்கள் நினைக்க நினைக்க நெஞ்சு வெதும்பும் திறத்தன.

வாசகர்களின் வாயிலாக வாங்கவேண்டிய மாபரபி, இரக்கமில்லா அரக்கன், தீயன், கூற்றனையான் என்ற சொற்களைக் கம்பன்தானே பெய்துவைத்திருப்பதால் கலைச்சுவை தேய்ந்திருப்பதை விமரிசனக் கலை தெரிந்தவர்களே நுனித்து அறிந்துகொள்ள இயலும்.

* * * *

"பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே!"

என்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் பாடலை நான் முதலில் படித்தபோது அதன் முழுப்பொருள் விளங்கவில்லை. எத்துணையும் பொருட்கிசையாக் கவிதைகள் எவை? முற்றும் இயற்கைமாறிய வரையறை நீங்கிய கற்பனைகள் எவை? எந்த நூலை மனத்தில் வைத்துக் கொண்டு இவ்வாறு சொல்லியிருக்கிறார் என்று தெரியவில்லை. பின்னர் நான் கம்பராமாயணத்தைப் பயிலத் தொடங்குகையில் அது விளங்கிவிட்டது.

இராமன் காட்டுக்குப் போகும்போது புனல் அழுவதும் பூனையழுவதும், கருவில் இருக்கும் சிசு அழுவதும், இலங்கை எரியுண்ணும்போது மரமெரிவதும், மணல் எரிவதும் மகாகவி கம்பன் ஒருவனால்தான் பாட இயலும் என்று அறிந்தேன். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் பாடலுக்குக் கம்பன்தான் சரியான பொருளை உணர்த்தினன்.

கம்பன் ஒரு கவிமழை; நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் நல்ல காவியம் செய்ய நினைக்கிற கவிஞன் கவிமழையாக இருந்துவிடக் கூடாது. நல்ல நிதானம் நிரம்பியிருக்க வேண்டும். அனுமான் கடலைத்தாண்ட மலைமேல் நிற்கும்போது ஒருபத்துப்பாட்டு, காலைத்தூக்கு கையில் ஒருபத்து, கையைத் தூக்கினல் ஒரு பத்து இரவு வந்தால் பத்து, பகல் வந்தால் இருபது இப்படி வாசகர்களைச் சலிப்படையச் செய்துவிடக் கூடாது. எந்தெந்த

இடங்களில் கற்பனைகளைப் பொருத்தமாக அமைக்கலாம் என்பதைக் கவிஞன் கவனித்தால் நல்லது.

இதுவரையிலும் கம்பனை வைத்துக் கொண்டு சில சிறு குறைபாடுகளைக் காட்டினேன். அதனால் ஒரு நல்ல காவியத்திற்கு வேண்டிய குறையின்மை தெளியப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

கம்பனிடம் சில குறைபாடுகளைக் காட்டியதின் மூலம் அவனுடைய கவிதாமேதையைக் குறைத்து விட்டேன் என்று கருதக் கூடாது. ஒவ்வொரு கவிஞனிடமும் சில குறைபாடுகள் இருப்பதுண்டு. இருப்பது மனிதப் பண்புதான். கவிஞனும் மனிதன்தானே!

கம்பனைப் படிக்கிற நாம் கம்பனைக் காட்டிலும் அருமையான காவியம் செய்ய இயலாவிட்டாலும் விரும்பவாவது வேண்டாமா? கம்பனைப்போல் மொழிபெயர்ப்புக் காவியமாகச் செய்யாமல், தெய்வமாக் கதையென்று சொல்லி ஒரு கதாபாத்திரத்திற்கே சார்பாகி, அடிமையாகி, வக்கீலாகி, நேர்மை இழந்து நில்லாமல் புதுமையும் தழுவிப் பழமையையும் தெரிந்து ஆக்க முனையவேண்டும்.

கம்பனின் யாப்புவன்மை நிகரற்றது. அவன் விருத்தப் பாவினங்களைக் கையாண்ட முறையே அலாதி. அவனது பாக்களின் அமைப்புமுறை புதுமைக்கும் புதுமையாய் நிற்க வல்லது. இளங்கோவடிகளிடம் கலைப்பண்பு மிகுதி; ஆனால் அவருடைய பா அமைப்பு முறையை இன்று நாம் பின்பற்ற முற்படுவதில்லை. ஏனெனில் அது பழமையானது. ஷேக்ஸ்பியரைப் புகழ்கிறார்கள்; சுவைக்கிறார்கள்; பெருமிதம் கொள்கிறார்கள். ஆனால் சேக்ஸ்பியர் செய்தமாதிரி இப்பொழுது கவிதை செய்யமாட்டார்கள். யாப்புருவம் (Form Style and versification) இப்போது புதுமை எய்திவிட்டது. யாப்புருவம் ஒவ்வொரு காலத்திலும் சிறு சிறுமாற்றம் எய்திக்கொண்டே போகும். இனிமேல்செய்யப் போகும் நல்ல காவியங்களில் மொழிநடையைப் பொறுத்த

மட்டில் கம்பனையும், சொற்கோவான மாணிக்கவாசகரை யும், மற்ற அனைத்திற்கும் புதுமைக் கவியான பாரதியையும், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவியரசரான பாரதி தாசனையும் பின்பற்றலாம். வள்ளுவனின் தெளிந்த ஞானமும், இளங்கோவின் கலைப்பண்பும், சங்க இலக்கியங் களின் கருத்துயர்வும் வரப்போகும் நல்ல காவியங்களிடை அமையுமானால் அவை உலக காவியங்கள் அனைத்தினும் தலை நிமிர்ந்து நிற்கும் பெற்றியனவாகலாம்.

பொன்னி அச்சகம் சென்னை-21